பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப்

# வலம்புரி
# VALAMPURI

மங்கையரின் அங்கமெல்லாம்
தங்க நகைகளால் மின்னிப்
பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1768)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 05 புதன்கிழமை 18-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 119

## புலிகளுக்கு அரசியல் அந்தஸ்து வழங்குவது அவசியமே

# தடை நீக்கமும் யுத்த நிறுத்தமும் புலிகளின் முன்நிபந்தனையல்ல!

### அன்ரன்பாலசிங்கம் தமிழ்கார்டியனுக்கு பேட்டி

(லண்டன்)

**தமிழீழ விடுதலைப்புலிகள் புதிய நிபந்தனைகளை விதித்து சமாதானப் பேச்சுகளுக்கு வேண்டுமென்றே முட்டுக்கட்டை போடுவதாக அரசு தெரிவிக்கும் குற்றச்சாட்டை விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன்பாலசிங்கம் மறுத்துள்ளார். பேச்சுவார்த்தைக்கு முன்பு யுத்தத்திற்கு ஓய்வு கொடுக்க வேண்டுமென்பதும், புலிகள் மீதானதடையை ஸ்ரீலங்கா அரசு நீக்கவேண்டுமென்பதும் புதிய நிபந்தனைகள் அல்ல. இதனை நீண்டகாலமாகவே வலியுறுத்திவருகிறோம் இதுவே சமாதானப் பேச்சிற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

லண்டனில் இருந்து வெளியாகும் பிரபல ஆங்கில ஏடான 'தமிழ் காடியன்' பத்திரிகைக்கு நேற்று அவர் வழங்கிய பேட்டியில் இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றியும் சமாதான முன்னெடுப்புகள் பற்றியும் விபரமாக விளக்கிக் கூறியுள்ளார்.

அப்பேட்டியில் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்திருப்பதாவது,

'விடுதலைப்புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்ட தடையை சிறீலங்கா அரசு நீக்கிவிட வேண்டுமென்ற பிரச்சினையை நாம் பல தடவைகள் எழுப்பியிருக்கின்றோம். சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னராக இத்தடையை நீக்குவது அவசியம் என நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்மிற்கு நான் சொல்லி வந்திருக்கிறேன்: பகிரங்க மேடைப்பேச்சுக்களிலும் பத்திரிகைப் பேட்டிகளிலும் இதனை நான் குறிப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் முன்நிபந்தனையால் பேச்சுவார்த்தையில் பின்னடைவு

### அமைச்சர் டி.எம்.ஜயரத்தினா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக அரசும், விடுதலைப்புலிகளும் இணக்கப்பாடொன்றுக்கு வரமுடியாத நிலையில் பேச்சு வார்த்தைக்கான திகதி, பேச்சுவார்த்தை நடைபெறும் இடம் தொடர்பாக எதனையும் அறிவிக்க முடியாத நிலையில் அரசு இருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும், விவசாய அமைச்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## நீர்கொழும்பு கைதிகளின் பெற்றோர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

புதியகுடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ்கைதுசெய்யப்பட்டு நீர்கொழும்புச்சிறையில்தடுத்துவைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகளையும் உறவினர்களையும் பிணையில்விடுதலை செய்யுமாறு கோரிஇன்று கைதிகளின்பெற்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### அன்னை பூபதியின் 13வது நினைவு தினம்

[வவுனியா]

அன்னை பூபதியின் 13வது நினைவு தினம் நாளை அனுஷ்டிக்கப் படுகிறது. இதனையொட்டி மானிப்பாய், நவாலி தாவடி, மற்றும் கோப்பாய், நீர்வேலி ஆகிய இடங்களில் அன்னை பூபதியின் நினைவுத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. [ந]

## முப்படைக்கும் ஆட்சேர்ப்பில் அரசு தீவிரம்

[கொழும்பு]

படையிலிருந்து தப்பியோடிய 4 ஆயிரத்து 700 படையினருடன் மேலும் 3 ஆயிரத்து 500படையினர் புதிதாகபடையில்இணைந்துள்ளனர். இவர்களில் 900பேர் கொமாண்டோ படையணியிலும் 700 பேர் விசேடபடையணிப்பிரிவிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாகஇராணுவவட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க கிழக்கு மாகாணத்தில் புலிகளின் தளபதிகள் சென்று திரும்பிய பின்னர் புலிகள் தரப்பிலும் ஆட்சேர்ப்புநடவடிக்கைகள்இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இராணுவ பொதுச்சேவைஅணிமுகாமில் பயிற்சியை முடித்து வெளியேறும் 100 இராணுவத்தினரின் அணிவகுப்புநிகழ்வுஎதிர்வரும் 22ம்திகதி நடைபெறுமென்று இராணுவ நடவடிக்கை தலைமைச்செயலகம் தெரிவித்துள்ளது. [இ-05]

## சமாதானப் பேரவையினர் நேற்று யாழ் வந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டு மக்களின் பிரச்சினைகள் பற்றி சுதந்திரமான ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்காக தென்னிலங்கையில் இருந்து தேசிய சமாதானப்பேரவை உறுப்பினர் 10பேர் நேற்று மாலையாழ்ப்பாணம் வந்துசேர்ந்துள்ளனர் அவர்களின் விபரம் வருமாறு,

★ கமல்லியனராச்சி[லக்பிம]
★பிரியானிவினீத்தாகுணரதனா(இலங்கை ஒலி பரப்பு கூட்டுத்தாபனம்)
★ஸ்ரான்லிசமர சிங்கா [தினமின]
★நிஹால்பிரியங்கா சுவர்ண வாஹினி]
★கலாநிதிதயானந்த பெரேரா[சுதந்திர பத்திரிகையாளர்
★செல்வி பிரான்சிஸ் புலத்சிங்கள
★இராசையாநிமலன்கார்த்தி

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சமாதானப் பேரவையினர் பொது அமைப்புகளை சந்திப்பர்

(யாழ்ப்பாணம்)

தென் இலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த சமாதானப் பேரவையினர் இன்று காலை யாழ்குடாநாட்டின் மூத்த பிரஜைகளைச் சந்தித்து குடாநாட்டின் இன்றைய நிலவரம் குறித்து கலந்துரையாடவுள்ளனர்.

இக் கலந்துரையடலின்பின் மகளிர் அபிவிருத்தியின் நிர்வாகிகளையும் அதனைத் தொடர்ந்து யாழ் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களையும் பிற்பகல் 2 45க்கு யாழ்மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தினரையும்பி பகல் 4மணிக்கு யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தையும் அதனைத் தொடர்ந்து குருநகர் சனசமூக நிலையத்தில் கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தினரையும் சந்தித்து இன்றைய யாழ் நிலவரம தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாக யாழ் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

## எரிக்சோல்-ரணில்சந்திப்பு

நோர்வேயில்தங்கியிருக்கும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மைச் சந்தித்து முக்கிய விடயங்கள் குறித்து விரிவாக பேச்சுநடத்தியுள்ளனரென்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகத் தகவல் துறையினர் தெரிவித்துள்ளனர். (இ)

## பாரதிநேசன் காலமானார்

(யாழ்ப்பாணம்)

மூத்த இடது சாரிப்பிரமுகரும் பிரபல எழுத்தாளரும் பத்திரிகையாளருமானபாரதி நேசன் (எஸ் சின்னத்தம்பி) நேற்றுக்காலை காலமானார் கம்யூனிஸ்ட் கட்சியின்உறுப்பினராகவும் பீக்கிங் வானொலிச் செய்திபாளராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்

இவரது இறுதிக் கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெறும். (வ)

## தாக்குதல்தவிர்ப்பு அறிவிப்பை அரசு ஒருபோதும் நீடிக்காது!

### பிரிகேடியர் கருணாரட்ன அறிவிப்பு

தமிழ் சிங்கள புதுவருடப் பிறப்பை ஒட்டி அரசுஅறிவித்திருந்த மோதல் தவிர்ப்பு அறிவித்தலை எக்காரணம் கொண்டும் அரசு நீடிக்க மாட்டாது என்றுஇராணுவப் பேச்சாளர் பிரிகேடியர்சனத் கருணரத்தின நேற்று தெரிவித்துள்ளார்.

அரசின் மோதல் தவிர்ப்பு மேலும் நீடிக்கப்பட மாட்டாது.

விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்களை அரசு தொடர்ந்துமேற்கொள்ளப்போவதாகவும் அத்தாக்குதல்களை அரசு தீவிரப் படுத்தும் என்றும் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியதும் புலிகள் மீதான தாக்குதல்கள் பற்றி முடிவு எடுக்கப்படவிருப்பதாகவும் தெரிவித்தார். (வ)

## வலம்புரி கவிதைக்குடும்ப அங்கத்தவர் விபரம்

101) ஆ. யோகினி
நீர்வேலி.
102) சின்னத்துரை சுபாயினி
புலோலி.
103) சின்னத்துரை சுபலதா
புலோலி.
104) ஐயாத்துரை கலாயினிதேவி
யாழ்ப்பாணம்.
105) ஏ. பூலிநிற்றா
யாழ்ப்பாணம்.
106) கதிரவேற்பிள்ளை அருந்தவராசா
கொக்குவில்.
107) குணநாயகம் சிறிகணேஸ்
மானிப்பாய்.
108) புதுமை
யாழ்ப்பாணம்.
109) இரத்தினசபாபதி குலசிங்கம்
நயினாதீவு.
110) கணேஸ் வாசுகி
பண்டத்தரிப்பு.
111) அருந்தவநாதன் அபிராமி
நீர்வேலி.
112) ரட்ணா லிங்கம்
ஆனைக்கோட்டை.
113) திருநாவுக்கரசு திருமயூரன்
யாழ்ப்பாணம்.
114) ஐயாத்துரை குமாரதாசன்
யாழ்ப்பாணம்.
115) கனகராசா சாமினா
அச்சுவேலி.
116) க. சிறிமோகனன்
நல்லூர்.
117) சுப்பிரமணியம் குகதேவன்
மல்லாகம்.
118) சிறிகாந்தன் நிசாந்
யாழ்ப்பாணம்.
119) துளசிஜா ஸ்ரீஸ்கந்தராஜா
கோப்பாய்.
120) றஞ்சி வீரபாகு
திருநெல்வேலி.
121) குகதாசினி பாலசுப்பிரமணியம்
கந்தர்மடம்.
122) செ. திருநாவுக்கரசு
நல்லூர்.
123) திருமதி தி. விஜயலட்சுமி
நல்லூர்.
124) அபிராஜன்
யாழ்ப்பாணம்.
125) தி. பயூரதி
யாழ்ப்பாணம்.
126) சிவகுரு நந்தினி
இணுவில்.
127) அரியகுமார் யசிகரன்
தாழையடி.
128) சுப்பிரமணியம் கவிதா
பண்டத்தரிப்பு.
129) சுப்பிரமணியம் ஜனித்தா
பண்டத்தரிப்பு.
130) சுப்பிரமணியம் தனுஷன்
பண்டத்தரிப்பு.
131) துரைராஜசிங்கம் மயூரதி
மானிப்பாய்.
132) சுலசனா துரைசிங்கம்
வண்ணார்பண்ணை.
133) மகேந்திரராஜா பிரவீணந்
சுன்னாகம்.
134) சுதா இராசரத்தினம்
யாழ்ப்பாணம்.
135) தர்மினி பத்நாதன்
யாழ்ப்பாணம்.
136) தியாகராசா குஞ்சிதபாதம்
வண்ணார்பண்ணை.
137) இராஜரட்ணம் புவிராஜ்
யாழ்ப்பாணம்.
138) குலசிங்கம் ஓவியா
சுன்னாகம்.
139) வா. செந்தில்குமரன்
கொக்குவில்.
140) க. ஜெயநதி
கொடிகாமம்.
141) இராஜரட்ணம் டெனிஸியஸ்
பருத்தித்துறை.
142) திருமதி. சுலோஜனா இராமச்சந்திரன்
உரும்பிராய்.
143) இராசலிங்கம் சுஜேந்திரன்
குளத்தடி.
144) வினிதா பத்மநாதன்
மானிப்பாய்.
145) இதஞ்சலி பாலசுப்பிரமணியம்
மிருசுவில்.
146) ஸ்ரீஹரி சிவதாஸ்
நல்லூர்.
147) ஷாலினி சிவதாஸ்
நல்லூர்.
148) ஜெசிக்கா தவஞானம்
யாழ்ப்பாணம்.
149) சிவஜா சிவனேசன்
யாழ்ப்பாணம்.
150) சிற்றம்பலம் சிவஞானராஜா
உடுவில்.

(தொடரும்)

## இறுதி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெற்று வரும் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகள் எதிர்வரும் 28, ஆம் 29 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இறுதி நிகழ்வுகள் மேலதிக அரசாங்க அதிபர் து வைத்திலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் தொடக்க நிகழ்வாக 5 ஆயிரம் மீற்றர் ஓட்டம் நாளை 19 ஆம் திகதியும் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம் 20 ஆம் திகதியும் காலை 7.00 மணிக்கு இடம்பெறவுள்ளதாக விளையாட்டுத்துறை அதிகாரி ஜே ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (உ-10)

## என்ஜின் ஒயில் விலையில் மாற்றமில்லை

(யாழ்ப்பாணம்)
என்ஜின் ஒயில் விலை அதிகரிக்கப்படவில்லையென யாழ் பெற்றோலியக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்த எரிபொருள் விலை ஏற்றத்தின் பிரகாரம் என்ஜின் ஒயிலின் விலை ஒரு லீற்றர் ஒயிலின் விலை 1 ரூபா 90 சதத்தால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (உ)

## விளக்க மறியல்

(மந்திகை)
மிருசுவில் பகுதியில் நடைபெற்ற எட்டுப்பேரினதும் படுகொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் 14 பேரும் சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் கடந்த திங்களன்று ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி அன்னலிங்கம் பிறேம் சங்கர் உத்தரவிட்டுள்ளார். (உ-23)

## தடுப்பு மருந்து எடுத்து வருகை

[யாழ்ப்பாணம்]
யாழ் கால் நடை வளர்ப்பு வைத்திய நிலையத்திற்கு கோழித் தடுப்பு மருந்துகள் ரணிக்கற், கம்போறாஅம்மை தடுப்பூசி ஆகியன கடந்த வாரம் திருகோணமலையில் இருந்து செஞ்சிலுவைகப்பல் மூலம் எடுத்துவரப்பட்டன.

பலமாதங்களாக இத் தடுப்புமருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவிவந்துள்ளமை தெரிந்தே. கோழி வளர்ப்பு பண்ணையாளர்கள் தங்கள் பிரதேச கால் நடை வளர்ப்பு சங்கத்தின் மூலம் தொடர்பு கொண்டு தடுப்பு மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். கால்நடை வளர்ப்பு வைத்திய உதவிப் பணிப்பாளர் டாக்டர் பி இராமநாதன் தெரிவித்துள்ளார். [உ-6]

## நிர்வாகிகள் தெரிவாகினர்

(கோப்பாய்)
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பாடசாலை அபிவிருத்திச்சபைப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

சபையின் தலைவராக கல்லூரி அதிபர் என். சிவகடாட்சம் செயலாளராக யோ. தாவீது பொருளாளராக எஸ். பகிரதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். [இ]

## புத்தாண்டு தினத்தில் உறவினரிடையே மோதல்
### நால்வர் படுகாயம்

(மந்திகை)
புத்தாண்டுத தினத்தில் உறவினர்களுடன் ஏற்பட்ட வாய்த்தகராறு காரணமாக ஏற்பட்ட வாள்வெட்டு, மற்றும் போத்தல் உடைத்து தாக்குதல் சம்பவங்களில் நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை 3 ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த கே. சிவா, அல்வாய் வடக்கைச் சேர்ந்த இராசையா. சண்முகலிங்கம், கரவெட்டி மண்டானைச் சேர்ந்த செல்லத்துரை தங்கராசா, அல்வாய் வடக்கைச் சேர்ந்த வி பாக்கியதாசன் வயது 43 ஆகியோரே பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ-23)

## யாழ். பல்கலை வெளிவாரி-வர்த்தகபிரிவு பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழக வெளிவாரி 1998 ஆம் ஆண்டுக்குரிய வர்த்தகமானி இறுதிப்பரீட்சை முடிவுகள் நேற்றையதினம் வெளியிடப்பட்டுள்ளன.

சித்திபெற்றோர் விபரம் வருமாறு,

ஜி. சுமதி 2 ஆம் (தரத்தில் சித்தி எம். நந்தகோபாலன், என். குணேஸ்வரி கே. வாசுகி ரி. நளினி, எஸ். திருவருட்செல்வன், ஆர். பரமேஸ்வரி.

இதேவேளை, வெளிவாரி 1998 ஆம் ஆண்டுக்கான கலைப்பிரிவு மாணவர்களது இறுதிப்பரீட்சை முடிவுகள் அடுத்தவாரம் அளவில் வெளியாகும் எனவும் தெரியவருகிறது (உ-6)

## சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவு

(மந்திகை)
மிருசுவில் ஒட்டுவெளிப் பகுதியில் தன்னின சேர்க்கைக்குட்படுத்தப்பட்டு பயிலுநர் சிப்பாய் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் இருவர் கடந்த 13 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை எதிர் வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி அன்னலிங்கம் பிறேம் சங்கர் உத்தரவிட்டார். (உ-23)

## குழு மோதலில் ஈடுபட்ட இளைஞர் இருவர் பொலிஸார் வசம்

(யாழ்ப்பாணம்)
மானிப்பாய் மருதடி விநாயகர் தேர்த் திருவிழா அன்று பெண்கள் மீது சேஷ்டை புரிந்ததாகக் கருதப்படும் ஓர் இளைஞர் குழுவிற்கும் இன்னொரு இளைஞர் குழுவிற்குமிடையே மானிப்பாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் மோதல் இடம்பெற்றுள்ளது.

இம் மோதலின் போது வாள், கத்தி போன்ற ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவ்விடம் விரைந்த இராணுவத்தினரால் சம்பந்தப்பட்ட இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, பாவித்த ஆயுதங்களுடன் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக மானிப்பாய்பொலிஸார்தெரிவித்துள்ளனர். (உ-2)

## தற்கொலைமுயற்சியில் ஈடுபடுவோர் தொகை சுன்னாகத்தில் அதிகமாம்

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் பகுதியில்தற்கொலைமுயற்சியில் ஈடுபடுவோர் தொகை அதிகரித்து வருவதாக சுன்னாகம்பொலிஸ்நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வறுமை, காதல் தோல்வி மற்றும் பலகாரணங்களினால் வாழ்வில்விரக்தி ஏற்பட்டு அரலிவிதைஉட்கொள்ளல், நச்சுமருந்துகள் உட்கொள்ளல், தீயில் எரிதல் கழுத்தில்சுருக்கிடுதல் போன்ற தற்கொலைமுயற்சிகளில் பலர்ஈடுபட்டதாகவும் கடந்த3வாரத்தில் மூன்றுபேர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்திருப்பதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

## ஆசிரியர்களுக்கான தொழில்சார் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)
வடமாகாண ஆசிரியர் சங்கம் நடத்தும் ஆசிரிய தொழில்சார் கருத்தரங்கு வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை யாழ் வேம்படி உயர்தர மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கில், ஆசிரியர் ஒழுக்காற்று விதிகள் எனும், விடயத்தில் தொல்புரம் ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் கா. சந்திரராசா

ஆசிரியர் கடமைக்கூறுகள் எனும் தலைமையில் யாழ். பண்ணாகம் மெய்கண்டான் ம/வி அதிபர் கா. நடராசா

அரச திணைக்களங்களில் செயலாற்றுகைத் தரக்கணிப்பீடுஎன்ற விடயத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன்.

ஓய்வூதியக்சணிப்பீடுகள் என்ற தலைப் ல் அரச லிகிதர் சேவைச்சங்க வடபிரதேசக்கிளை செயலர் எஸ் தவராசா ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். [உ

## செய்தித்துளிகள்

### அரவம் தீண்டி சிறுவன் மரணம்

[வவுனியா]

பாம்புக் கடிக்கு இலக்கான சிறுவன் ஒருவன் மல்லாவி மருத்துவ மனையில் சடந்த ஞாயிறன்று மரணமானார்.

கொக்காவில் வீதியைச் சேர்ந்த பரராஜசிங்கம் பிருந்தவாணன் என்ற சிறுவனே மரணமடைந்த வராவார். [ந-5]

### விரிவுரைகளை பகிஷ்கரித்தனர்

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் தமிழ்ப் பெண்கள் இருவரைக் கைது செய்து கொடூரமாக சித்திரவதைகுட்படுத்தி.ப லியல் வதைபுரிந்த படையினரின் அராஜகத்தைக் கண்டித்தும், அதற்கு எதிர்ப்புத்தெரிவித்தும்நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

அனைத்துப் பீட மாணவர்களும் இப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை விரிவுரைகளுக்குச் செல்லாது தமது கண்டனத்தையும் எதிர்ப்பையும் காட்டியுள்ளனர். [இ-06)

### மரதனோட்டமும் சைக்கிளோட்டமும்

(கோப்பாய்)

வலி-கிழக்கு பிரதேசசபையினால் நடத்தப்படவுள்ள தடகளப் போட்டியை முன்னிட்டு அண்மையில் மரதன் ஓட்டம்,மற்றும் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் நடைபெற்றன.

போட்டிகளை பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம்,உபதலைவர் யு.எல்.ஏ ரவி,சபையின் செயலர் எஸ். குகதாசன் ஆகியோர் ஆரம்பித்துவைத்தனர். [இ]

### மாணவனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

புதுவருடப்பிறப்பன்று கொக்குவில் இந்துக்கல்லூரியில் இரவுஇடம்பெற்ற இசை நிகழ்ச்சியை பார்ப்பதற்கு சென்ற மாணவனைக் காணவில்லையென உறவினர்களால் மனிதஉரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வைத்தீஸ்வராக் கல்லூரி உயர்தரவகுப்பு மாணவனான கொக்குவில்மேற்கைச்சேர்ந்த முத்துக்குமாரு தினேஷ்குமார் [வயது20]என்பவரே காணாமல் போயுள்ளார். (இ-10)

### புதிய பணிப்பாளர்

[கொழும்பு]

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்புதிய பணிப்பாளராக கருணாரட்ண பரணவிதான நேற்று பதவி ஏற்றுள்ளார்.

ஊடகத் தகவல்துறை அமைச்சின் ஊடக ஒருங்கிணைப்புச் செயலாளர் நாயகமாக இவர் கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. [உ-7]

### தடுப்புமுகாமுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமிற்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

கைதிகளின் [illegible] களால் அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் கடிதம் என்பவற்றினையும்அவர்எடுத்துச் சென்று அவர்களிடம் ஒப்படைக்கவுள்ளார். (உ-10)

### புத்தாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிசைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினர் சித்திரைப்புத்தாண்டு விழாவினை அங்குள்ள இல்லசிறார்களுடன் சிறப்பாகக் கொண்டாடினர்.

சங்கத்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் கனடாவில்உள்ள கல்லூரியின்பழையமாணவன் த.விவேகானந்தன் அனுப்பிவைத்துள்ளபணத்தில் சிறார்களுக்கு உடுதுணிகள் வழங்கி புதுவருடப்பிறப்பைக்கொண்டாடினர்.

யாழ் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் ச.அருந்தாகரன்தலைமையில் மனித வாழ்க்கைக்கு உறுதுணையானது அறங்களா? ஆன்மீகமா? என்னும் தலைப்பில் பட்டிமன்றம் இடம் பெற்றது. இதில்இல்லமாணவர்கள் கலந்துகொண்டனர். (வ)

### நாவுக்கரசு சுவாமிகள் குரு பூசை

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நல்லூர் ஸ்ரீசட்டநாதஸ்வாமி தேவஸ்தானத்தில் நாளை வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இடம் பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து, ஸ்ரீகாமாட்சி அம்பாள் மடாலயத்தில் மு.ப 10 மணிக்கு அப்பர்சுவாமிகளுக்கு பூசை வழிபாடும் அப்பரின் அருள் தொண்டு பற்றிய சொற்பொழிவும் தேவாரப் பண்ணிசையும் இடம்பெறும். (உ)

### விரிவுரைகள் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் ஈராண்டுப் பகுதி நேரப்பட்டப்பின் கல்வித் தகமைக் கற்கை நெறி 2000/2002 பகுதி நேரம் பருவம் இரண்டு விரிவுரைகள் 21 ஆம் திகதி சனிக்கிழமை வழமையான நேர அட்டவணைகளில் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (உ-6)

### சேவைக் கால செயலமர்வு

(மந்திகை)

தென்மராட்சி வலயப்பாடசாலைகளில் 12, 13 தரங்களுக்கு நடனம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் கால செயலமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி இணுவில் மத்திய கல்லூரியில நடைபெறவுள்ளது.

★ ★ ★

தென்மராட்சிக் கல்வி வலயப்பாடசாலைகளில் தரம் 10 இற்கு சித்திரப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால செயலமர்வு எதிர்வரும் 26 ஆம் திகதி நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

★ ★ ★

தென்மராட்சி வலயப்பாடசாலைகளில் தரம் 9, 10களில் வரலாறும் சமூகக் கல்வியும் கற்பிக்கும்ஆசிரியர்களுக்கான சேவைக் கால செயலமர்வு இன்று நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாகவலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார் [உ-23]

## படையினர்-புலிகள் மோதல்

# இடையில் அகப்பட்ட பிரி. பெண் ஊடகவியலாளர் படுகாயம்

[கொழும்பு]

ஸ்ரீலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் பிரிட்டிஷ் பெண் ஊடகவியலாளர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

திங்கட்கிழமை இரவு வவுனியாவில் இருந்து சுமார் 6 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளபறையானாங்குளத்தில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே மோதல் ஒன்று இடம் பெற்றது.

அம்மோதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பு பின்வாங்கி ஓடியபின், படையினர் தேடுதல் பணியில் ஈடுபட்ட பொழுது காயங்களுடன் மேற்படி ஊடகவியலாளர் காப்பாற்றப்பட்டுள்ளார்.

காப்பாற்றப்பட்ட பெண் ஊடகவியலாளர் வவுனியா, அநுராதபுரம் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்றபின் இவரது கண்களில் ஒன்று பாதிக்கப்பட்டதால் கொழும்பு வைத்திய சாலைக்கு விமான மூலம் அனுப்பப்பட்டுள்ளார் (உ-7)

## யாழ்-கொடிகாமம்

## பேருந்து சேவையை விஸ்தரிக்க யோசனை

[மந்திகை]

தென்மராட்சிக்கான 769 ஆம் இலக்க பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து அங்கு சென்று வீடுகளைப் பார்த்து வரும் பொதுமக்கள் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

இதனையடுத்து மேலும் இப்பகுதிக்கான போக்குவரத்தினை விஸ்தரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமத்திற்கும் நாளொன்றுக்கு இரு சேவைகள் வீதம் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. [உ-23]

## இராசி பலன்

18-4-2001
(சித்திரை 5, புதன்)
தசமி பி.ப 3.55 வரை
அவிட்டம் பி.ப 7.53 வரை
இராகுகாலம் 12.03- 1 33
நல்லநேரம் 4.33- 6.03

**மேடம்**
நினைத்த காரியம் கைகூடும், தனலாபம், கீர்த்தி, நண்பர்கள் சந்திப்பு.

**இடபம்**
தொழில் சிறப்பு, பெரியோர் ஆசி, அதிகாரம், முயற்சி கைகூடும்,

**மிதுனம்**
பிரயாணம், கட்டுப்பாடு, புதிய திட்டமிடல், அரச நன்மை,

**கடகம்**
எதிர்பாராத பிரச்சினை, கடன்தொல்லை,காரியதடங்கல், வியாதி,

**சிங்கம்**
போசன சுகம், உல்லாசம், நண்பர்கள் உதவி, காரியம் கைகூடும்.

**கன்னி**
புதிய முயற்சி, வியாதிகுணமடைதல், காரியம்கைகூடும், தனவரவு,

**துலாம்**
காரிய தாமதம், கௌரவக் குறைவு, குடும்பக் கவலை, வியாபாரச் சிறப்பு,

**விருச்சிகம்**
உறவினர் மனஸ்தாபம், பயந்த சுபாவம், முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை,

**தனுசு**
வாக்கு மேன்மை, இனிய சம்பவம், காரிய நன்மை, சகோதரர் உதவி,

**மகரம்**
விதண்டாவாதம், பொருள் விரயம், மதிப்புக் குறைவு, காரிய தாமதம்.

**கும்பம்**
ஆழ்ந்த சிந்தனை, பெரியோர் ஆசி, ஜனவசியம், அமைதியான நிலை.

**மீனம்**
உணர்ச்சி வசப்படல், சுப செலவு, முயற்சி தாமதம், சயன சுகக் குறைவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## ஒரு மாதத்தின் முன் வீடு பார்க்கச் சென்றவர் இன்னமும் திரும்பவில்லை

[யாழ்ப்பாணம்]

வீடு பார்க்கச் சென்ற முதியவரொருவர் காணாமல் போயுள்ளதாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் கோணப்புலமடியில் வசித்து வந்த கதிரன் முருகன் (வயது 60) என்பவரே தமது சொந்த வீடு அமைந்திருக்கும் தையிட்டி கிழக்கிற்குக் கடந்த மாதம் 15 ஆம் திகதி சென்ற வேளை காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி சின்னப் பிள்ளை முருகன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். [உ 2]

## புது வருடத்தை ஒட்டி பொலிஸ் நிலையங்களில் விளையாட்டு போட்டிகள்

[யாழ்ப்பாணம்]

தமிழ்- சிங்கள புது வருடத்தை ஒட்டி வலிகாமம் வலய பொலிஸ் நிலையங்களில் பல விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றுள்ளன.

இந்த வகையில், தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தினரால் புது வருடத்தை ஒட்டி நடத்தப்பட்ட 8 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிய கரப்பந்தாட்டத்தின் இறுதிப் போட்டிக்கு, தெல்லிப்பழை பொலிஸ் நிலைய அணியும், புனர்வாழ்வு முகாம அணியும் தெரிவாகி போட்டியிட்டதில் தெல்லிப்பழை பொலிஸ் நிலைய அணி வெற்றியீட்டி உபாலி குணசேகர இணைத்தைத் தட்டிக கொண்டனர்.

இவ் விளையாட்டுக்களைப் பெருமளவான பொது மக்களும கண்டு களித்தமை குறிப்பிடத் தக்கதாகும. (உ-2)

## அ. அட்டைகளை பெறுக!

(யாழ்ப்பாணம்)

ஒரு தொகுதி அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

பெயர் விபரங்கள் வருமாறு,

★ ஆறுமுகத்தான் வேலன் பொற்பதிவீதி கொக்குவில்.

★ முத்தையா விஜயலக்சுமி வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம்.

★ மாணிக்கம் தர்மராஜன் அந்திரான் சண்டிலிப்பாய்.

★ சிதம்பரி பாலசுப்பிரமணியம் தக்கும் சம்பாதி துனாலை மேற்கு

★ தர்மதாஸ் நொபஸ்ரின் பாங்சால்வீதி யாழ்ப்பாணம்.

★ அன்ரனி அனிஸ்ரன் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம்.

★ சோமசுந்தரம் பாலச்சந்திரன் பெருங்குளம் பிள்ளையார் கோயில் சாவகச்சேரி.

★ சதாசிவம் கருணாகரன் பொன்னம்பலம் வீதி காரைநகர்.

★ சிற்றம்பலம் சபாரத்தினம் குடத்தனை வடக்கு

★ சரஸ்வதி கந்தையா வேப்பங்குளம் வவுனியா.

★ சபாரத்தினம் சிற்றம்பலம காரையூர் குடத்தனை.

★ இராஜரட்ணம பாலச்சந்திரன் பூங்காவீதிகுருநகர்.

★ மாணிக்கம் கஷ்ணவேல நாகம்மாள் கோயில் வீதி உடுவில் சுன்னாகம.

★ பொன்னுத்துரை புலோமினா சாமியார் வீதி கொழும்புத்துறை

★ சசிமாலா பத்மநாதன் கொக்குவில் தெற்கு கொக்குவில். (உ-7)

## பொதுக் கூட்டம்

உடுவில் சங்குவேலி சனசமூக நிலையத்தின நடப்பாண்டிற்கான நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும் எதிர்வரும 29 ஆம் திகதி பி.ப 3.00 மணியளவில் நிலையக் கட்டடத்தில் அதன தலைவர் பு சக்திவடிவேல தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-2)

# தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல - 13

### ஆக்கம்: செல்வி

★ **பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.**

01) குரு+உபதேசம் — — — — —
02) கிரி+இந்திரன் — — — — — —
03) பத+அம்புயம் — — — — —
04) சிவ+ஆலயம் — — — — — —
05) பனை+ஒலை — — — —

★ **பின்வரும் பாடலைப் படித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

''...வட்டமான பெரும் பூசினிக் காய் போல மஞ்சள் நிற
உறுமாலைப்பார்—தலையில்
மஞ்சள் நிற உறுமாலைப்பார்;

கூட்டியிறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம் பொடு வில்லைப்பார் - இரு
கைகளில் அம் பொடு வில்லைப்பார்...''

06) இப்பாடலிற் புலவர் விவரிக்கும் வேடம் யாது?
07) 'உறுமால்' என்பதன் கருத்து யாது?
08) பூசினிக் காய் போல இருப்பது யாது?
09) இப்பாடலைப் பாடிய புலவரின் பெயர் என்ன?
10) இப் புலவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

★ **பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?**

11) நலிந்த தண்டுத் தாவரங்கள் மூன்றினது பெயர்களைத் தருக?
12) வேர்களில் உணவு சேமிக்கும் தாவரங்கள் மூன்றினது பெயர்களைத் தருக?
13) நீரிலும் நிலத்திலும் வாழக் கூடிய உயிரினங்கள் இரண்டினது பெயர்களைத் தருக?
14) பொருட்கள் எரியும் போது வெளிவிடப்படும் வாயு எது?
15) மின் குமிழினுள்ளே இருக்கும் ஒளிரும் கம்பிச்சுருள் எவ்வாறு அழைக்கப்படும்?

★ **கீழே தரப்படும் சொல்லைவைத்து ஐந்து புதிய சொற்களை உருவாக்குங்கள்**
**(கதிர்காமம்)**

16) — — — — — — — —
17) — — — — — — — —
18) — — — — — — — —
19) — — — — — — — —
20) — — — — — — — —

★ **பின்வரும் சொற்களின் கருத்தை தருக?**

21) கண்டு கழித்தல் — — — — — —
22) கண் மலர்தல் — — — — — — —
23) கா லூன்றல் — — — — — —
24) செவிசாய்த்தல் — — — —
25) முகத்திலடித்தல் — — — —

★ **பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ப்பதத்தை தருக?**

26) BEAUTIFUL
27) WIFE
28) GARDEN
29) WINDOW
30) NOISE

★ **பின்வரும் வினாக்களுக்கு விடைதருக?**

31) திருஞான சம்பந்தர் முதன் முதலில் பாடிய தேவாரம் யாது?
32) திருநாவுக்கரசர் முத்தியடைந்த பொழுது எத்தனை வயது?
33) ''பித்தா பிறை சூடி ——'' எனும் தேவாரத்தைப் பாடியவர் யார்?
34) அப்பருக்கு சூழை நோய் வந்த பொழுது பாடிய தேவாரம் யாது?
35) சமணமதத்தவரால் கல்லிலே கட்டி கடலிலே விடப்பட்ட நாயனார் யார்?

★ **பின்வரும் வினாக்களுக்கு விடைதருக?**

36) எனது சகோதரன் என்னிலும் பார்க்க அதிக பணம் வைத்திருக்கின்றான். எனது சகோதரி, எனது சகோதரனிலும் பார்க்கக் குறைவாக வைத்திருக்கிறாள்; எவரிடம் மிகக் குறைவான பணம் இருக்கின்றது.
37) பாரியைவிட சூரி முப்பது ரூபா குறைவாக வைத்திருக்கிறாள். இருவரிடமும் மொத்தமாக நூறுரூபா இருந்தால் சூரியிடம் எத்தனை ரூபா இருக்கும்?

A, B, C, ஆகிய மூவரும் உயரமான ஆண்கள்; D, E ஆகிய இருவரும் உயரமற்ற பெண்கள்; D, C ஆகிய இருவரும் அழகானவர்கள்; E, B ஆகிய இருவரும் மெலிந்த உருவம் உடையவர்கள்;

38) மெலிந்த உயரமான ஆண் யார்?
39) அழகான உயரமற்ற பெண் யார்?
40) உயரமான அழகான ஆண் யார்?

**குறிப்பு :-**

விடைகளை வேறு தாளில் எழுதி அனும்பவும். இதற்கான விடைகளை 23-04-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

# புலமைப் பரிசில் பரீட்சை

## வினா இல- 12

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

★ ட. சதீஸ்,
யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி;

★ அ. வஜீரன்.
யாழ். பரியோவான் கல்லூரி.

★ தி.தனயம்ஜென்,
கோப்பாய் நாவலர் வித்தியாலயம்;

★ ம.லவண்ராஜ்,
புற்றளை மகாவித்தியாலயம்:

★ உ.நிவேதா,
வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி.

★ க.நிரோஜினி,
யாழ்.புனித மரியாள் வித்தியாலயம்;

★ க.மயூரன்,
வல்வை மகளிர் மகாவித்தியாலயம்;

★ வே.விஜிக்குமார்,
வல்வை.மகளிர் மகாவித்தியாலயம்;

★ சி.பிரணவன்,
மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை;

★ நா அனோஜினி,
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

★ அ.கடோற்கஜன்,
யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை.

★ ஸ்ரீ.தீபிகா,
மானிபபாய் சோதி வேம்படி வித்தியாசாலை;

★ த.டயானி,
மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை;

★ வி.கோகுலன்,
சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.

★ ர தீபனா,
தேவரையாளி இந்துக்கல்லூரி.

★ வி.மிதிலா,
துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்;

★ த.ஏகவரதன்,
யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை.

★ பா.சாயிஷங்கர்,
வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி

★ சு.பிரமிலா,
வட்டு.திருநாவுக்கரசு வித்தியாலயம்.

★ செ.தக்ஷாயினி,
பெரியபுலம் மகாவித்தியாலயம்;

★ சு.கோகுலன்,
புற்றளை மகாவித்தியாலயம்,

★ ஞா.யோகனா,
வட்டு இந்துக்கல்லூரி.

★ சி.விஜிதரன்,
வட்டு.யாழ்ப்பாணக்கல்லூரி.

★ சி.துவாரகன்,
கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.

★ பா.கௌசிகா,
தாவடி இ.த.க பாடசாலை;

★ சி.லகீசன்,
மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்,

★ வெ.சிறிமுகுந்தவேள்,
மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்;

★ கு.ஜெசாமினி,
உசன் இ.ம.வித்தியாலயம்;

★ வி சிறானி,
வட்டு மத்திய கல்லூரி.

★ து.வைஸ்ணவி,
வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி.

★ ம.மேரிறெபிக்கா,
யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்.

★ ச,பிரவீணா,
கரந்தன்,இராமுப்பிள்ளை வித்தியாலயம்.

★ கு.மேரிஜசிந்தா,
யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்.

★ வி ஜெயதீபா,
நயினாதீவு நாகபூசனி வித்தியாலயம்;

★ இ பிரதிகா,
சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம்.

★ அ விசிகரன்,
அல்வாய் றோ.க.த.க. பாடசாலை;

★ த பிரதாப்,
புற்றளை மகாவித்தியாலயம்.

★ சி,கஜந்தினி,
சாவ.இந்து ஆரம்பப்பாடசாலை.

---

**கல்விப்பகுதி**
**வினா இல-13**
"வலம்புரி"
இல: 15, வெளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................
சொந்த முகவரி: ..............................
கற்கும் பாடசாலை: ..............................
மாணவர் கையொப்பம்: ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்;

---

# புலமைப் பரிசில் பரீட்சை

## வினா இல-12 விடைகள்

1) பிழை
2) பிழை
3) சரி
4) சரி
5) சரி
6) ஒட்டகம்
7) புளோறன்ஸ் நைற்றிங்கேள்
8) குறிஞ்சிப்பூ
9) மலேசியா
10) கியூபா
11) அழகிய பொருளால்
12) கண்ணைக்கவரும் அழகையும், கருத்தைக்கவரும் அறிவையும்
13) திருமகளையும், கலைமகளையும்
14) கவின்கலை யென்றும், பயன்கலை என்றும்
15) அழகு
16) நரேந்திரசிங்கன்
17) ரோமன் கத்தோலிக்கம்
18) ஒல்லாந்தர்
19) கி.பி 1453 ஆம்ஆண்டு
20) பேர்டினன்ட் மகலன்
21) இருபொருள் படபேசுதல்
22) ஒருவரின் அறிவு முதலியவற்றை ஆராய்தல்
23) பதற்றக்காரன்
24) கொதி செய்தல்
25) விதண்டாவாதம்
26) Who is Speaking?
27) How old are you?
28) What are you doing?
29) When did you come?
30) Wyh are you crying?
31) குரும்பை
32) நுங்கு
33) வடு
34) மூசு
35) கச்சல்
36) 30 ரூபா
37) C-மிகவும் மந்தமானவன்
38) D-ஓரளவு வேகம் கூடியவள்
39) பந்தயத்தில் வென்றவர் கனி
40) பந்தயத்தி தோற்றவர் கினி

# மாணவர் உதவு தொகை

[யாழ்ப்பாணம்]

யாழ்.கொக்குவில்தொழில் நுட்பக் கல்லூரி 2001 ஆம் ஆண்டுக்கான மாணவர் உதவிப்பணம் வழங்கும் முகமாக உரிய மாணவர்களை தெரிவு செய்யும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன;

மாணவர்கள் குடும்ப அட்டைகளை மட்டும் காரியாலய நாட்களில் அதிபரிடம் காண்பித்து விண்ணப்பத்தினை பூர்த்தி செய்யுமாறு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை மே 17 ஆம் திகதிக்கு முன்னதாகக்கிராமஅலுவலர்கள் பிரதேசசெயலர் ஊடாக அதிபர் தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கல்லூரி அதிபர் அ.செந்தில் நாதன் அறிவித்துள்ளார்;

(உ-06)

# துரிதகதியில் மதில் அமைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியின் வளாகத்தைச் சுற்றி மதில் அமைக்கும் வகையில் கொழும்பில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரி பயிற்சித் திணைக்களத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது;

இதன் அடிப்படையில் 17 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மதில் அமைக்கும் பணிகள் மிக விரைவாக இடம்பெற்று வருவதாகவும் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்;[உ-6]

## இன்று ஒரு தகவல்

# கண்டதும் காதல் வந்தது

தேசபந்து சி. ஆர். தாஸ் ஒரு சமயம் வெளியூர் சென்று ஒருவழக்கில்ஆஜராகி வெற்றி பெற்று ரயிலில் முதல் வகுப்பில் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவர் இருந்த முதல் வகுப்பில் ஒரு நாகரிக யுவதியும் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். தாஸ் தமது பணப்பெட்டியைத் திறந்து ஏதோ எடுத்து பிறகு மூடினார். அதில் ஏராளமாகப் பணம் இருந்ததை அந்த யுவதி பார்த்துவிட்டாள். பணத்தை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் என்று அவள் திட்டமிட்டுவிட்டாள். சிறிது நேரம் கழித்து அவள் அவரைப் பார்த்து, 'நான் உங்களைக் காதலிக்கிறேன். என்னை நீங்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.' என்று ஒயிலாகப்பேசி அவரை அணுகினாள். தாஸுக்கு இது அருவருப்பாகஇருந்தது. அவர் பேசாமல் இருந்தார்.

''இதற்கு நீங்கள் இணங்காவிட்டால் அபாயச் சங்கிலியை இழுத்து உங்களை அவமானத்துக்கு உள்ளாக்குவேன்'' என்று மிரட்டினாள். தாஸ் அப்போதும் மௌனமாகஇருந்தாரே தவிர, தாம் ஆபத்தான நிலையில் இருப்பதை உணர்ந்தார். பெண் சொல்வதைத் தான் எல்லோரும் நம்புவார்கள் இல்லையா? ஒரு கணம் யோசித்தார். ''நீ என்ன சொல்கிறாய்? நான் ஒரு செவிடு, நீ என்னிடம் ஏதாவது சொல்லுவதானால் அதை ஒரு சீட்டில் எழுதிக்காட்டு பதில் சொல்கிறேன் என்று கூறி தாம் ஒரு முழுச் செவிடன்போல் பாவனை செய்தார். அப்படியே அவளும் எழுதிக் கொடுத்தாள். அவ்வளவு தான் ''நீ என்ன அபாயச் சங்கிலியை இழுப்பது! நானே இழுக்கிறேன். என்றுகூறி அபாயச்சங்கிலியை இழுத்து அவளைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தார் தாஸ்.

நன்றி
ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்

பேராதனைப் பல்கலை நடத்திய

# கவிதை,கட்டுரை,சிறுகதை போட்டி முடிவுகள்

(கோப்பாய்)

பேராதனைப் பல்கலைக் கழக சங்கீத நாட்டிய சங்கத்தினரால் கடந்த ஆண்டுநடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் வெயிடப்பட்டுள்ளது.

பாடசாலை, பல்கலைக் கழகம் ஏனையோர் மட்டத்தில் இடம்பெற்றஇப்போட்டி முடிவுகள் வருமாறு,

### கவிதை

#### பாடசாலை மட்டம்

1 ஆம் இடம்- செல்வரத்தினம் ருபன் யாழ். வட்டு இந்துக் கல்லூரி.

2 ஆம் இடம்- ராஜன்பத்மசீலன் பாத்திமா தேசியபாடசாலை கல்முனை.

3 ஆம் இடம்-செல்விஆஷா பிரான்சிஸ் திருக்குடும்பக்கன்னியர் மடம் கொழும்பு.

#### பல்கலைக் கழக மட்டம்

1 ஆம் இடம்- பிராகராசா மணிவண்ணன்முகாமைத்துவ பீடம் கிழக்கு பல்கலைக்கழகம்.

2 இடம்- செல்வி தவராசா சந்திரமதி தமிழ்த்துறையாழ் பல்கலைக் கழகம்.

3 ஆம் இடம்- செல்வி. எஸ். அருந்ததிவிவசாயபீடம் யாழ். பல்கலைக் கழகம்.

#### ஏனையோர் மட்டம்

1 ஆம் இடம்- செ.குணரத்தினம் மட்டக்களப்பு.

2 ஆம் இடம்- திருமதி நா. ஞானரட்ணம்கல்முனை:

3 ஆம் இடம்- செல்வி கி. கிருஸ்ணவதனிதிருகோணமலை;

### கட்டுரை

#### பாடசாலை மட்டம்

1 ஆம் இடம்- இ. தாட்சாயினி பாத்திமா தேசிய பாடசாலை கல்முனை;

2 ஆம் இடம்–கை. சுமங்கலி யாழ். வேம்படி பெண்கள் உயர் தர பாடசாலை.

3 ஆம் இடம்- கு. மஞ்சுளா புனித மரியாள் வித்தியாலயம் கேகாலை;

#### ஏனையோர் மட்டம்

1 ஆம் இடம்– த. தர்சினி வட்டக்கச்சி கிளிநொச்சி.

2 ஆம் இடம்- அ. ரகுபதி இணுவில்.

3 ஆம் இடம் ந. தர்சினி பலாங்கொடை;

### சிறுகதை

#### பாடசாலை மட்டம்

1 ஆம் இடம்-கா.அதிவீரன் ஆண்டிமுனை அ.த.க பாடசாலை உடப்பு.

2 ஆம் இடம் செல்வி சி. தயாளினி விபுலானந்தா ம.வி வவுனியா.

3 ஆம் இடம்- செல்வி மா. வசந்திதிருக்குடும்பக்கன்னியர் மடம், கொழும்பு.

#### பல்கலைக் கழக மட்டம்

1 ஆம் இடம்- சி. கருணாகரன் பொறியியல் பீடம், பேராதனை பல்கலைக் கழகம்.

2 ஆம் இடம்- அ: றகுமதி மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்.

3 ஆம் இடம்- இ. வைகுந்தன் பொறியியல் பீடம், பேராதனை பல்கலைக்கழகம்

#### ஏனையோர் மட்டம்

1 ஆம் இடம்- கே.வி. குணசேகரம். கோப்பாய்

2 ஆம் இடம்- திருமதி சி. சுகிர்தராணி முறக்கொட்டாஞ்சேனை;

3 ஆம்இடம்-இரா.மோசஸ் பண்டாரவளை.

புதிய கல்விச் சீர்திருத்த

# ஒப்படைச் செயல் திட்டங்களில் மாணவர் உற்சாகமின்றி ஈடுபாடு

(சங்கானை)

புதிய கல்விச் சீர்திருத்தத்தில் உள்ளடங்கும் ஒப்படைகள் செயல் திட்டங்களை ஒப்படைப்பதில் மாணவர்கள் உற்சாகமின்றிக் காணப்படுகின்றனர்.

இது பற்றி மாணவர்களுக்கு போதிய விளக்கமின்மையே இதற்கு காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, இடம் பெயர்ந்த பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலைகளில் முன்பு ஒப்படைத்த மேற்படி செயற்பாடுகளை மீண்டும் செய்ய வேண்டிய நிலையில் இருப்பதும்,

இதனால் இவ்வாண்டிற்கான ஒப்படைகளை ஒப்படைப்பதில் காலதாமதம் ஏற்படுவது பற்றியும் சம்பந்தப்பட்ட மாணவர்கள் மனச்சலிப்பு வெளியிட்டுள்ளனர்.

[உ-124]

## ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம், பாலர் பாடசாலை என்பன இணைந்து நடத்தும் 49 ஆவது ஆண்டு விழாவும், இல்ல மெய்வல்லுநர் போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்று பி.ப 3.00 மணிக்கு நிலையத்தலைவர் கோ. நரேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக நல்லூர் பிரதேசசபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் கலந்து கொள்வார்.

(உ-104)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப் பத்திரம் பெற்ற சகல மதுபான விற்பனையாளர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப 2.00 மணிக்கு திக்கம் வடிசாலையில் இடம் பெறவுள்ளது.

(உ)

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

கள் கொள்வனவு விடயமாக சகல ப.தெ.வ.அ.கூ. சங்கத் தலைவர் பொது முகாமையாளர் ஆகியோர்க்கான முக்கிய கலந்துரையாடல் இன்று மு.ப. 11.00 மணிக்கு திக்கம் வடிசாலையில் இடம் பெறவிருப்பதாக திக்கம் வடிசாலையின்பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்;

(உ)

## கலைஞர்களுக்கு ஓய்வூதியம்

(கொழும்பு)

திரைப்படத் துறையின் முன்னணிக் கலைஞர்கள் 5 பேருக்கு மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

திரைப்பட அபிவிருத்தி நிதியம் இக்கொடுப்பனவுக்கான பணத்தைச் செலுத்தவுள்ளது; (உ-7)

# கார் உரிமையாளரை தாக்கிய நபர் பொலிஸ் விசாரணையில்

(ஏழாலை)

வாடகைக் காருக்கு செலுத்த வேண்டிய பணத்தைக் கொடுக்க மறுத்தவர், காரின் உரிமையாளரை கடுமையாகத் தாக்கியதுடன் காரையும் சேதப்படுத்த முற்பட்ட சம்பவம் அண்மையில் மல்லாகம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி நபர் எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றில் வாடகைக் காருக்கு எரிபொருள்பெற்றுக்கொண்டபின் அதற்குப்பணம்செலுத்த மறுத்துஎரிபொருள் விற்பனை நிலைய உரிமையாளரை தகாத வார்த்தைகளால்ஏசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து கார்ச் சாரதியும், அவரைத் தாக்கிய நபரும் விசாரணைகளின் பொருட்டு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

(உ-12)

# பத்துவயதுச் சிறுவன் விபத்தில் மரணம் பரு.நகரசபை கண்டனம்

(மந்திகை)

பருத்தித்துறையில் கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற விபத்தில்இறந்த பத்துவயதுச் சிறுவனின் இறப்புக்கு 524 வது படைப்பிரிவும், இறங்குதுறை பார ஊர்திகள் சங்கமுமே பொறுப் பேற்க வேண்டுமென்று பருத்தித்துறை நகரசபை கண்டனம் வெளியிட்டுள்ளது:

தபேந்திரன் காத்தீபனின் விபத்து நடைபெறுவதற்கு மூன்று மாதங்களுக்குமுன்பே பாரஊர்திகளை 3ஆம் குறுக்குத் தெருவினூடாக போக்குவரத்துக்களை மேற்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்திருந்தோம்.

அவர்கள்எமது அறிவிப்புக்கு நடவடிக்கை எடுக்+ தவறியமையே இவ் விபத்து நடைபெறக்காரணம். எனவே இவ்வாறானசம்பவங்கள் மேலும் தொடராமல் இருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளைத்துரிதமாக மேற்சொள்ளவேண்டும் என பருத்தித்துறை நகரசபை வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# சுன்னாகம் தபாலக செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிக்கும் அபாயம்

[யாழ்ப்பாணம்]

தொடர்ந்து சில நாட்களாகப் பெய்து வரும் மழையினால் சுன்னாக தபாலகச் செயற்பாடுகள் யாவும் மிக சிரமமான முறையில் இடம் பெற்று வருவதினை அவதானிக்க முடிகிறது.

கூரை வழியாக கட்டடத்திற்குள் மழை நீர் ஒழுகி உட்புறம் நீர்தேங்கி நிற்பதுடன், அங்குள்ள கடிதங்கள் மற்றும் காசுக் கட்டளைகள் மழையினால் பாதிப்படையக்கூடிய நிலையிலும் காணப்படுகின்றன.

மேலும், அங்குள்ள ஊழியர்கள தமது சொந்தப் பணங்களில் இருந்து சிறு சிறு திருத்தங்களை செய்து வருகின்ற போதிலும் திருப்தியான முறையில் திருத்தம செய்ய முடியாதுள்ளதாகவும் குறை தெரிவிக்கப்படுகிறது.

மழை மேலும் தொடரும் பட்சத்தில் இத்தபாலக செயற்பாடுகள மிக மோசமாகப் பாதிக்கப்படும் நிலையில் இருப்பதினையும் அவதானிக்கக் கூடியதாக வுள்ளது.

(உ-2)

# உடுவில் பிரதேச செயலர் பிரிவில் சிறுவர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள சிறுவர்களுக்கான கருத்தரங்கு சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான கிராம மட்டக் கண்காணிப்புக் குழுவினரால் நேற்றைய தினம் உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடாத்தப்பட்டது.

அக் கருத்தரங்கில் சிறுவர்களின் ஆற்றல், ஆளுமைகளை வளர்க்கக் கூடிய வகையில் கருத்துக்கள் வழங்கப்பட்டதுடன் சிறுவர்கள் தமக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தாமே முன்னின்று தெரியப்படுத்தும் வகையில் வினாக் கொத்துக்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன;

சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் அமைக்கப்பட்டுள்ள பிரதேச மட்டக் கண்காணிப்புக் குழுக்கள் ஊடாக மாவட்ட மட்டக் கண்காணிப்புக் குழுவிற்கு சிறுவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக் காட்டுவதற்கு அக்கருத்தரங்கு உதவுவதாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

[உ-2]

## கசிப்பு உற்பத்தி செய்தவர் கைது

(ஏழாலை)

சுன்னாகம் மயிலணிப் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுவந்த குடும்பஸ்தர் ஒருவரை அவரது வீட்டில் வைத்து கையும் மெய்யுமாக சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர்; (உ-12)

# இவ்வாண்டுசாகித்திய விருது பெறுவோர் விபரம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சாகித்திய விழா எதிர்வரும் யூன் மாதம் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சாகித்திய விருது பெறுவதற்கு பதினாறு பேர் தகுதி பெற்றுள்ளனர்.

அவர்களது பெயர் விபரம் வருமாறு:-

தெணியான், வண்ணை செ. சிவராஜா, ராஜசிறிகாந்தன்,

ரூபாராணி ஜோசப், இராசையா பஞ்சலிங்கம், ஏ இக்பால், ந. சுந்தரேசன், சபா. ஜெயராசா, நவநாயகமூர்த்தி, வி ரீ சிவகுமாரன்.

பேராசிரியர் வி ரீ சிவபாலன், ந ஆனந்தராஜா,

வாசுகி சொக்கலிங்கம், சே. கிருஷ்ணராஜா, செ. மெற்றாஸ் மயில், வ அ ராசரத்தினம.

சாகித்திய விருதுக்கு தெரிவான மேற்படி ஆக்கங்கள் அனைத்தும 1999 ஆம் ஆண்டில் வெளிவந்தமை என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

### அரச அதிருப்தியாளர்களால்
## சைபீரிய அமைச்சர் சுட்டுக் கொலை

(லண்டன்)
சைபீரியாவின் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பன்கோ மக்சிகலோ அதிருப்தியாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நாட்டின் வட பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட அமைச்சர் உலங்குவானூர்தியில் இருந்து இறங்கிய சமயமே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சைபீரிய ஜனாதிபதி சாள்ஸ் ரெய்லரை பதவி கவிழ்ப்பதற்கு முயற்சி மேற்கொண்டுள்ள அரச எதிர்ப்பாளர்களே இப்படு கொலையை செய்திருக்க வேண்டும் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-9)

## பலஸ்தீன பாதுகாப்பு நிலைகள்மீது இஸ்ரேல் படைகள் உக்கிர தாக்கு

[ஜெருசலேம்]
மத்திய கிழக்கின் காஸா நிலப்பரப்பில் உள்ள பலஸ்தீனப் பாதுகாப்பு நிலைகள் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் கடும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக தொடுக்கப்பட்ட இத்தாக்குதலில் பலஸ்தீனர்களுக்கு குறிப்பிடத்தக்க சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இஸ்ரேலின் இஸ்ரெரோட் நகரின் மீது பலஸ்தீனியர்கள் நடத்திய மோட்டார் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் முகமாகவே இத்தாக்குதல் நிகழ்த்தப்பட்டது என இஸ்ரேல் படை வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (உ-9)

## சிரியாப் படைகள் மீது இஸ்ரேல் தாக்குதல்

[பேரூட்]
கிழக்கு லெபனானில் நிலை கொண்டுள்ள சிரியப் படைகளின் ராடர் நிலையங்கள் மீது இஸ்ரேல் துருப்புக்கள் தாக்கியதில் இரண்டு சிரியப் படையினர் உட்பட மேலும் சிலர் காயமடைந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இஸ்ரேல் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாகவே திங்கட்கிழமை இரவு இத்தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இத்தாக்குதல்களை லெபனானின் ஜனாதிபதி கண்டித்துள்ளதுடன் இத்தாக்குதல் தொடருமானால் பெரும் மோதல் வெடிக்குமென்று எச்சரித்துள்ளார். (உ-7)

### ஜெயா தாக்கல் செய்த
## வேட்புமனுவை ஏற்கக்கூடாது வழக்கறிஞர் எதிர் நடவடிக்கை

(சென்னை)
ஜெயலலிதா தாக்கல் செய்த வேட்பு மனுவினை ஏற்றுக்கொள்ளக் கூடாதெனவும் இரண்டு வருடங்களுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்றவர்களை தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக் கூடாதெனவும் கூறி மக்கள் நலன்காக்கும் மனுவொன்றை வழக்கறிஞர் விஜயன்தாக்கல்செய்துள்ளார்

இருப்பினும், அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதாவின் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படுமா என்ற பரவலான சர்ச்சையின் மத்தியில் ஜெயலலிதா ஆண்டிப்பட்டி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு தொகுதிகளிலும் வேட்பு மனுவினைத் தாக்கல் செய்துவிட்டார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜெயலலிதா தாக்கல் செய்த மேற்படி வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படுமா இல்லையா என்பது வரும் 24 ஆம் திகதி வேட்புமனு பரிசீலனை செய்த பின்னரே தெரியவரும் என்று கூறப்படுகிறது. (உ-9)

### பாட்டாளி மக்கள் கட்சி
## போட்டியிடும் தொகுதிகள் விபரம்வெளியிடப் பட்டது

[சென்னை]
அ.இ.அ.தி.மு.க.கூட்டணியில் இணைந்து போட்டியிடும் பாட்டாளி மக்கள் கட்சி தான் போட்டியிடவிருக்கும்27தொகுதிகளுள்10 தொகுதிகளை நேற்று அறிவித்துள்ளது.

புதுவைச் சட்டசபைத் தேர்தலில் பா.ம.க போட்டியிட இருக்கும் தொகுதிகள் தொடர்பான பட்டியல் நாளை வெளியிடப்படும் எனவும் பா.ம.க தலைவர் ராமதாஸ் கூறியுள்ளார். [உ-9]

### அரசின் அழைப்பு தொடர்பாக
## குரியத் மாநாட்டுக் கட்சி கூடி ஆராய்வு

(ஸ்ரீநகர்)
காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய அரசு விடுத்திருந்த அழைப்பு தொடர்பாக விவாதிக்க மாநாட்டுக் கட்சி கூடவிருக்கிறது.

பேச்சுக்கான அழைப்பு முறைப்படி தமக்குக் கிடைக்காத போதும், அதில் கலந்து கொள்வது பற்றி ஆலோசிப்பதற்கே, குரியத் மாநாட்டுக் கட்சியினர் ஒன்றுகூடவுள்ளனர்.

இந்திய மத்திய அரசின் தலைமைப் பேச்சுவார்த்தையாளர் காஷ்மீர் முன்னாள் முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்திய போது குரியத் மாநாட்டுக் கட்சியைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப் போவதாகக் கூறியமை குறிப்பிடத்தக்கது. (து)

## புதுவருடக் கொண்டாட்டங்களில் பொதுமக்கள் 500 பேர் உயிரிழப்பு

[பாங்கொங்]
தாய்லாந்தில் புதுவருடக் கொண்டாட்டங்கள் மற்றும் வேடிக்கை நிகழ்வுகளின் போது இதுவரை 500 இற்கும் மேற்பட்டோர் இறந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு இடம் பெற்று வரும் புதுவருடக் கொண்டாட்டங்களில்பெருமளவு பொதுமக்கள் கலந்து கொண்டதால் நெரிசலில்சிக்கியே இவர்களில் பலர் இறந்துள்ளனர்.

தவிர போதைப் பாவனையால் ஏற்பட்ட வீதி விபத்துக்களிலும் பலர் இறந்துள்ளனர்.

அத்துடன், இக்களியாட்ட நிகழ்வுகளின் போது 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்து வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதே வேளை, புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் தொடர்ந்தும் இடம் பெறுவதால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது (து)

## ஜம்முவில் வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் 17 பேர் மரணம்

இந்தியாவின் ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் கடந்த சனியன்று இடம்பெற்ற வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் மொத்தம் 17 பேர் இறந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி தினத்தன்று முஸ்லிம் தீவிரவாத அமைப்பான லக்ஷறி-தொய்பாவை சேர்ந்த 3 பேரை படையினர் சுட்டுக்கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-9]

### இந்திய அரசு பதவி விலக வேண்டும்
## என்ற கோரிக்கையை காங்கிரஸ் நிபந்தனைகளுடன் கைவிட்டது

(புதுடில்லி)
தெஹல்கா ஆயுதஊழல் தொடர்பாக அரசு பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை காங்கிரஸ் கட்சி கைவிட்டுள்ளது.

இத்தகவலை காங்கிரஸ் மேலிடம் நேற்று அறிவித்ததுடன் இது தொடர்பாக காங்கிரஸ் கட்சி ஆளும் அரசிடம் இரு நிபந்தனைகளையும் விதித்துள்ளது.

ஊழலோடு சம்பந்தப்பட்ட அனைவரும் தனித் தனியே விசாரிக்கப்பட்டு வழக்குத் தொடர வேண்டும் முழுமையாக இந்த ஊழல் விவகாரத்தை பாராளுமன்றத் தெரிவுக்குழு விசாரிக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஓய்வு பெற்ற நீதியரசரின் தனிநபர் விசாரணையில் தங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றும் அது திருப்தியிராதென்றும் காங்கிரஸ் சுட்டிக் காட்டியுள்ளது. (து)

### தமிழக சட்டசபைத் தேர்தல்
## வேட்புமனுத் தாக்கல் தாக்கல் செய்யப்பட்டன

[சென்னை]
தமிழக சட்டசபைத் தேர்தலுக்கானவேட்புமனுத் தாக்கல் செய்யும்பணிநேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, அ.இ.அ.தி.மு.க பொதுச்செயலர் செல்வி ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட முடியுமா? என்ற பெரும் சந்தேகம் அனைவர் மனதிலும் எழுந்துள்ள இந்நிலையில் அவர் கிருஷ்ணகிரி, ஆண்டிப் பட்டி ஆகிய இரு தொகுதிகளில் தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

இதே வேளை, ஜெயலலிதாவை தேர்தலில்போட்டியிட அனுமதிக்கக்கூடாதுஎன அவர் மீதானகுற்றச்சாட்டுக்களைக் கூறி அவரது மனுவை தேர்தல் கமிசன் தள்ளுபடி செய்ய வேண்டும் எனக் கோரி எதிர்க் கூட்டணிக் கட்சியான தி.மு.க. தேர்தல் அதிகாரிகளை தூண்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

### உலக தரிசனம்

## குவைத்தின் பாதுகாப்புக்கு அமெரிக்கா உத்தரவாதம்

(வாஷிங்டன்)
குவைத்தைப் பாதுகாப்பதற்கு தாம் எப்போதும் தயாராக இருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

குவைத்தின் வெளிநாட்டு இராஜாங்க அமைச்சர் ஷேக் முகமட் அல்ஷலாம் அல்சபா இலை நேற்றுமுன்தினம் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொலின் பவல் சந்தித்த போதே குவைத்தின் பாதுகாப்புப் பற்றிய அமெரிக்காவின் இந்நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார்.

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற வளைகுடா யுத்தத்தின் போது குவைத்தை ஆக்கிரமித்த ஈராக்கியப் படைகளை விரட்டி அடிக்க கூட்டுப் படைத் தளபதியாக கொலின் பவல் கடமையாற்றியமைஇங்கு குறிப்பிடத்தக்கது. (உ-9)

## தமிழக தேர்தல்களம் சூடுபிடிப்பு ஏட்டிக்குப்போட்டியான பிரசாரங்கள்
### நேற்றுமுதல் ஆரம்பம்

(சென்னை)
தி.மு.கவின் தமிழகம் முழுவதுமான தேர்தல் பிரசாரம் நேற்று அதன் தலைவர் மு.கருணாநிதியின் தலைமையில் ஆரம்பமானது.

வழமைபோலவே கருணாநிதி ஜெயலலிதா மீது கடுமையான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியும் அ.இ.அ.தி.மு.கவின் ஊழல் அராஜகத்தை அழிப்பதற்கு அனைவரும் அணிதிரள்வோம் என்றும், முதல்வதேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் முழங்கி வருவதாக கூறப்படுகிறது.

இதேவேளை, ஜெயலலிதா தனது பிரசாரக்கூட்டத்தை இன்று ஆரம்பிக்கவுள்ளார். (உ-9)

### ஈரானில் இருந்து இயற்கைவாயு இந்தியாவுக்கு

(தெஹ்ரான்)
ஈரானிலிருந்து இயற்கை வாயு இந்தியாவிற்கு கொண்டு வரப்படவிருக்கிறது.

இதற்கான பூர்வாங்க பேச்சுவார்த்தைகள், இந்தியப் பிரதமர் ஈரானுக்கு அண்மையில் சென்றிருந்த பொழுது இடம்பெற்றுள்ளது. (து)

பகை நட்பாக் கொண் டொழுகும் பண்புடையாளன் தகைமைக்கண் தங்கிற்று உலகு

- குறள்

வலம்புரி

## சனிபகவானின் மாற்றம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு உதவுமாறு நோர்வே அரசிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருமே கேட்டிருந்தனர். அதன் பிரகாரமே நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் தனது சமாதான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

அரசும் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு அது வெற்றியளிக்குமாயின் சிறிய நாடான இலங்கையில் யுத்தத்திற்கு முடிவு கட்ட முடியும். இரு சாராரும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதை, வழங்கப்படும் உரிமைகளோ அல்லது நிபந்தனைகளோ தீர்மானிப்பதில்லை. உண்மையில் இரு தரப்பினருக்குமிடையே நிலவும் நம்பிக்கையே பேச்சுவார்த்தைக்கான அடிப்படையாகும். ஆனால் இரு தரப்பும் ஒருவரை ஒருவர் நம்பப்போவதில்லையென்பது வெளிப்படையான உண்மை. இரு தரப்பினரிடையேயும் நம்பிக்கையில்லாமல் நடக்கும் பேச்சுவார்த்தை வெறும் பகட்டாக இருக்கமுடியுமே யொழிய தீர்வெதனையும் தருமென எதிர்பார்க்க முடியாது.

புலிகளுடன் பேசுவதன் மூலமே தீர்வு காணமுடியுமென அரசு உளப்பூர்வமாக விரும்பினால் செக்கோசிலவாக்கியாவில் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவுசெய்யவேண்டியதேவைஏற்பட்டிராது.

ஒருபுறத்தில் சமாதானப் பேச்சுக்கான முயற்சி, மறுபுறத்தில் ஆயுதக் கொள்வனவு இந்நிலையில் நிலைமை எப்படியாகுமென எதிர்வுகூற முடியாதுள்ளது.

பலகோடி ரூபாவுக்கு ஆயுதங்கள் கொள்வனவு செய்துள்ள போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த யுத்தத்தினால் நாட்டின் பொருளாதாதாரம் அழிகிறது. அபிவிருத்தி அஸ்தமிக்கிறது எனக் கூக்குரல் போட்டுள்ளார். தென்னிலங்கைஅரசியலை உற்று நோக்கினால் சனிபகவான் ஒரு ராசிக்கு மாறாமல் சிலரின் சிரசில் ஏறி சிந்தையைக் கலக்குகிறார் போல் தெரிகிறது. இன்றொருகதை - நாளை இன்னோர் கதையென அடிக்கடி மாறும் அரசியல்வாதிகளை ஆண்டவனே காக்கட்டும்.

# முற்கால வரலாறுகள் முறையாக இன்மையால்

# பிற்காலத்தவர் பிழையாக எழுதிவைத்தனர்

வரலாறுகள் திரித்து எழுதப்படுகின்றன என்று ஆசிரியர்சங்கங்கள் ஓலமிடுகின்றன. அரசாங்கம் தமது கொள்கைக்கு ஏற்றபடி, பாடப்புத்தகங்களில்இனவேற்றுமையைவளர்க்கும் கருத்துகளைப் புகுத்துவதை றெஜி ஸ்ரீவர்தனா போன்ற அறிஞர்கள் சிலதசாப்தங்களுக்குமுன்னரே கண்டித்தனர். அப்போக்கின் மூல வித்துகள் எப்படி ஏகாதிபத்திய வாதிகளால் விதைக்கப்பட்டன என்பதை உலகறிந்த இந்திய வரலாற்று மேதையின் மூலம் அறிகின்றோம். (ஆ-ர்)

'புராதன இந்தியாவை வியாக்கியானம் செய்தல்' என்ற நூலில் றொமீலா தாபர் விரிவாகக் கூறும் விளக்கங்கள் கவனிக்கத் தக்கவை. ஐரோப்பிய மறுமலர்ச்சிக்குப்பின் புராதன உலகைப் பற்றிய விரிவான ஆய்வுகளை தங்கள் காலக் கருத்தியல் அக்கறைகளை வைத்துக் கொண்டே ஆரம்பித்தனர். 18 ஆம் நூற்றாண்டு முதல் இந்திய வரலாற்று வியாக்கியானம் ஐரோப்பிய - குறிப்பாக பிரித்தானிய வரலாற்றறிஞரின் உலக நோக்குடன் நெருங்கிய தொடர்புற்றிருந்தது. இதன் பயனாக விளைந்த கொள்கைகள் எல்லாம், ஐரோப்பிய அரசியல், கருத்தியல் நலன்களுக்கு ஏற்றதாகவே எழுந்தன. அந் நலன்களைப் பிரசாரம் செய்யும் கருவியாகவே இந்திய வரலாறு அமைந்தது. மரபுவழிஇந்திய வரலாற்று நூல்கள்- ஆட்களின் வரலாற்றையும் சம்பவங்களின் கோவையையும் கொண்டவைகள்- பெருமளவுக்கு பாராமுகம் செய்யப்பட்டன.

### கீழ்த்திசை இயல்

ஐரோப்பியர் எழுதிய இந்திய வரலாறு ஒரு புதிய இந்திய வரலாற்று மரபைத் தோற்றுவித்தது. குடியேற்ற நாட்டு ஆதிக்கப் போக்கில் 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பிற 'காலனித்துவ' சமூகங்களின் வரலாற்றை ஒத்திருந்தது. ஜோன்ஸ், கோல்புறூக், வில்சன் போன்றவர்கள் கீழ்த்திசை இயல் நிபுணர்களாகி இந்திய மொழிகளில் பாண்டித்தியம் பெற்று, (ஆங்கில) கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தில் ஊழியம் செய்தவர்கள்: நிர்வாகத்திற்கு அவசியமான இந்திய மரபுச் சட்டங்கள், அரசியல், சமூகம், சமயம் ஆகிவற்றை சமஸ்கிருதம், பாரசீகம் என்னும் மொழிகள் மூலம் கற்றனர். தமது தொன்மொழி (கிரேக்க இலத்தீன்) மரபைக் கொண்டே அனைத்தையும் விளக்க முற்பட்டனர்.

### சமஸ்கிருதம்

19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய (அமெரிக்கப்]பல் கலைக்கழகங்களில் சமஸ்கிருதகல்வி பெருகியது. அத்துடன் ஒப்பியல் மொழி நூல் என்ற புதிய துறை தோன்றியது. வேத சமஸ்கிருதம் இந்திய சமூகத்தை மட்டுமன்றி, இந்தோ- ஐரோப்பிய சமூகத்தையும் விளக்க உபயோகிக்கப்படலாயிற்று. சமஸ்கிருத கல்விமான்களே இந்திய வரலாற்றின் ஆரம்ப நிலையை விளக்க முன் வந்தனர். சிலர் இந்தியாவுக்கு வாராமலே இந்திய நிஜ வாழ்வைப் பாராமலே, இந்த முயற்சியில் ஈடுபட்டனர். அவர்களுள் மிக்க தாக்கம் புரிந்த கல்விமான் மாக்ஸ் முல்லர்; புராதன இந்திய கிராம சமூகங்களை அழகு ஒழுகச் சித்தரித்த அவர் கருத்துக்களை வாசித்தவர்கள் அவர் இந்தியாவுக்கு ஒருபோதும் வரவேயில்லை என்பதை நம்ப மாட்டார்கள். அக்கால வரலாற்று வியாக்கியானங்கள் புராதன இந்திய மூலகங்களைப் பிழையாக விளங்கிய குறைபாட்டுடன் (ஆராயாமலே முன் எண்ணக் கருவை வளர்த்துக் கொண்டவர்களது) வக்கிர மனப்பதிவுகளையும் தாங்கி இருந்தன.

### இன அடிப்படை

இந்தியவியல் ஆய்வின் விளைவாக எழுந்த மிகச் சக்தி வாய்ந்த 19 ஆம் நூற்றாண்டுக் கொள்கை ஆரிய இனக் கொள்கையாகும். வேத சமஸ்கிருதத்திலும் (பாரசீக) அவெஸ்த மொழியிலும் கண்ட 'ஆர்ய' என்ற சொல்லுக்கு இன அடிப்படையில் புதிய பொருள் தரப்பட்டது. இந்திய சமூகத்தில் பழங்குடிகளினின்றும் வேறுபட்ட வெள்ளை நிறத்தவர்கள் இந்தோ- ஐரோப்பிய மொழி ஒன்றைப் பேசியபடியால் இவர்கள் கி மு. 2000 ஆண்டளவில் வட இந்தியாவுக்குள் நுழைந்தனர். சுதேசிகளை வெற்றி கொண்டனர், வேத ஆரிய பண்பாட்டை ஸ்தாபித்தனர் என்ற கொள்கை வளர்க்கப்பட்டது.

மாக்ஸ்முல்லர் காலத்திலேயே மொழியையும் இனத்தையும் ஒன்றிணைக்கும் கருத்து பிழையானது என்று அறிஞர் கண்டு கொண்டனர். அவர்பிற்கால எழுத்துகளில் தம் கருத்து அது அல்ல (இன வேறுபாடு அல்ல) என விளக்கினார். எனினும் அது பலன் அளிக்கவில்லை. பிழையான கருத்துவே ரூன்றிவிட்டது. 'ஆர்ய' என்றது உயர்ந்தோர், மேலோர் என்ற பொருளில் வேத சமஸ்கிருதத்தில் இருக்கவும் 'தாஸ' என்ற சொல்லுக்கு எதிராக இதனை இனக்கருத்தில் நோக்கிய ஐரோப்பியர் தம் கண்டத்தில் தம்மவருக்கும் செமெதிக் (யூத) இனத்தவருக்கும் இடையில் நிலவிய பகைமையைக் கருத்திற் கொண்டனர் போலும்.

இந்திய வரலாறு சர்வாதிகார மன்னர்களின் கதை; இந்திய சமூகம் நிலையியல் ரீதியானது; பயனற்றது. உலக வரலாற்றில் பின்தள்ளப்பட்டது என்றார் கார்ள் மாக்ஸ் இயங்கியலில் நம்பிக்கை உள்ளவர் எனினும் இந்திய சமூகம் பற்றிய தம் சமகால மானிடவியலர் கருத்துக்களை உள்வாங்கி மாற்றம் ஏதுமில்லாத இந்திய மாதிரியை ஆசிய உற்பத்தி முறைக்கு அடிப்படையாகித் தம் கொள்கையை வகுத்தார்.

### ஆரியக் கொள்கை

தாபர் 'ஆரிய' என்ற சொல்லுக்கு பல்வேறு கருத்தில் தம்மனம் போனவாறு விளக்கம் தந்தவர்களை எடுத்துக் காட்டுகிறார். சிலர் அது 'அந்நியன்' பிற நாட்டவன் என்ற பொருள் உடையது என்றும் தமது கொள்கைக்கு ஏற்பக் கருத்து தந்துள்ளனர். லியோபோல்ட் என்பவர் 'இந்தியாவில் ஆரியக் கொள்கையைப் பிரித்தானியர் பயன் படுத்தியமை என்ற ஆய்வுக்கட்டுரையை 1974 ல் ஆங்கில வரலாற்று நோக்கு' என்ற சஞ்சிகையில் வெளியிட்டதைச் சுட்டிக் காட்டுகிறார்.

கோ. கேசவனுடைய 'மண்ணும் மனிதரும்' என்ற

**எ. சபாரத்தினம்**

### புதிய வரலாறு

பயன்பாட்டு வாதியான ஜேமஸ் மில் எழுதிய 'பிரித்தானிய – இந்திய வரலாறு' பழைய இந்திய சமூகம் பயன் அற்றது என்றும், சமூக சீர்திருத்தம் அவசியம் என்றும் போதித்தது; இங்கிலாந்தில் அதனைப் பாட நூலாகப் படித்து விட்டு இந்தியாவுக்கு நிர்வாக சேவைக்கு வந்த அதிகாரிகள் 19 ம் நூற்றாண்டு பயன்பாட்டு வாதத்துக்கு மாறான இந்திய மரபு வழி நிறுவனங்கள் (சாதி சடங்கு முதலியன) அழிக்கப்பட வேண்டும் என்ற போக்கில் நிர்வாகம் புரிந்தனர். இந்தியாவில் 1858 க்குப் பின் புதிய பல்கலைக்கழகக் கல்வி கற்றவர்களும் இந்த ஆரிய இனக் கொள்கையை மகிழ்வுடன் ஏற்றனர், கிறிஸ்தவ மிஷினரிமார் பழைய வர்ண சமூக அமைப்பை உடைத்தாலேயே, தமது சமயப் பணி முன் எடுக்கப்படலாம் என்று கருதி வரலாற்று நூல்களை எழுதினர். ஹெகல் என்ற ஜேர்மன் மெய்யியலர் நூலுக்கு முன்னுரை எழுதிய நய கலாநிதி க. கைலாசபதி றொமீலா தாபரின் கருத்துகளை ஏற்று ஆரியர் குடியேறிய கதை ஏகாதிபத்திய வாதிகளின் நலன் கருதி இந்தியர் மீது சுமத்தபபட்டது என்பதை விளக்கியுள்ளார்.

ஆயினும் நம்மவர் இன்றும் பழைய 'வண்டிச் சக்கரத் தடத்தியேலே செல்லுகின்றனர் 1990 களில் வெளிவந்த இந்திய பட்டப் படிப்பு வரலாற்றுப் பாட நூல்களில் ஆரிய இனக் குடியேற்றம் பற்றிய பழைய வாதங்களுக்குச் சிறிய இடமும், சுதந்தர இந்திய வரலாற்றறிஞர் இந்தியாவே ஆரியரது தாயகம் என்பதை நிலை நாட்டும் விளக்கங்களுக்கு அதிக இடமும் கொடுக்கின்றனர். இலங்கைப் பல்கலைக் கழகங்களில் . . ?

'இந்திய வரலாற்றை மீள எழுதுதல்' என்ற சிறு நூல் (பிரான்ஸே) கோசியர் ஒரு பிரஞ்சு அறிஞரால எழுதப்பட்டது வரலாறு கற்பிப் போர் அதனை அவசியம் படிக்க வேண்டும்.

## பொருட்கள் உங்களுடையதா?

புத்தாண்டு தினத்தன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியின்போது கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் நல்லூர் பிரதேச சபையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இப்பொருட்களுக்கு உரியவர்கள் பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு அப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் வருமாறு, விசேட அடையாள அட்டையுடன் பேர்ஸ் ஒன்று புஸ்பராசா வினோதன், கைக் கடிகாரம் ஒன்று, சைக்கிள் திறப்பு ஒன்று, கால் கொலுசு ஒன்று. (உ)

## இணைப்புகள் வழங்கப்படும்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில், நல்லூர் பொது நூலகங்களில் நவீன டிஸ் அன்ரனா பொருத்தப்பட்டு பல்வேறு வெளிநாட்டு நிகழ்ச்சிகளும் ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன.

இதன் மூலம் கொக்குவில், நல்லூர் நூல் நிலையங்களிற்கு அருகில் உள்ளவர்களுக்கும் இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளதால் இச்சேவையைப் பெறவிரும்புபவர்கள் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தரம் மூன்று ஆங்கில பாடத்திற்குரிய புதிய கல்வி சீர்திருத்த செயலமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில்; யாழ். கல்விவலயப்பாடசாலைகளில் தற்போது தரம் 3 இல் ஆங்கிலம் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது. பங்குபற்றுமாறு யாழ்வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். [உ-3]

## நிர்வாகசபைக் கூட்டம்

[மந்திகை]

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் நிர்வாக சபைக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணிக்கு கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள மன்றத்தில் நடைபெறவுள்ளதாக செயலாளர் நமசிவயாம் சிவபாலன் தெரிவித்துள்ளார். [உ 23]

## வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம)

கடந்தபல வருடங்களாகத் திருத்தப்படாது இருந்த ஈச்சமோட்டை பிரதானவீதி தற்போது திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது

(உ-104)

தங்க நகை உலகில்
மங்காப் புகழ் பெற்ற
தங்க ஆபரணங்களின்
சாம்ராஜ்யம்

**மகாநதி ஜுவல்லறி**

72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(இ/1769)


### புலிகளின்..-

சருமான டி எம். ஜயரத்தினா நேற்று தெரிவித்துள்ளார்.

அரசு – புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அமைச்சர் டி எம் ஜயரத்தினா மேலும் தெரிவித்திருப்பதாவது;

அரசுக்கும் – புலிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டு, சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதில் விடுதலைப் புலிகளின் நிபந்தனைகள் முட்டுக்கட்டையாக உள்ளது. இந் நிலையில் ஜனாதிபதி சந்திரிகாவும் தற்போது நாட்டில் இல்லாதபடியால் அரசு – புலிகள் பேச்சுவார்த்தை தொடர்பாக எதுவும் கூறமுடியாதுள்ளது.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பேச்சுவார்த்தைக்கான இடம், திகதி தீர்மானிக்கப்படவிருப்பதாக தெரிவித்த கருத்துத்தொடர்பாக அமைச்சர் டி எம் ஜயரத்தினாவிடம் கேட்கப்பட்டபோது பேச்சுவார்த்தைக்கான சுமுகமான சூழ்நிலை தென்பட்டு வரும் வேளையில் விடுதலைப்புலிகள் திடீரென விதித்துள்ள முன் நிபந்தனைகள் அரசு, புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில பாரிய பின்னடைவை ஏற்படுத்தி விட்டது என்று அவர் தெரிவித்தார். (வ)

### சமாதானப்...

பேசு [தேசிய சமாதானப்பேரவையின் நிர்வாக சபைஉறுப்பினர்]

★நாதன் [தேசிய சமாதானப் பேரவை நிகழ்ச்சித் திட்டதயாரிப்பாளர்]

★செல்வி மனிக் மெண்டிஸ் [ஊடகவியலாளர் ஐரோப்பிய ஒன்றியம்]

★ஷியாமலா பெர்னான்டோ [ஐரோப்பியஒன்றிய சிரேஷ்ட செயலாளர்]

பத்துப்பேரில் ஆறுபேர் பத்திரிகையாளர்கள என்பது குறிப்பிடத்தக்கது. [வ]

### தடை நீக்கமும்..-

பிட்டு வந்திருக்கிறேன்: இதனை ஒரு முன்நிபந்தனையாகக் கருதக்கூடாது. ஒரு வேண்டுகோளாகவே பார்க்கலாம்.

தமிழீழ மக்களைப் பிரதிநிதித்துவபடுத்தும் சட்டபூர்வமான அமைப்பாகஎமது இயக்கத்தை ஏற்றுக்கொள்ள நாம் விடுக்கும் ஒரு வேண்டுகோளாக ஒரு விண்ணப்பமாக கருதவேண்டும் நிரந்தரமான அரசியற் தீர்வு காணும் நோக்கத்துடன் எம்முடன் ஆக்கபூர்வமானபேச்சுக்களை நடத்த சிறீலங்கா அரசுவிரும்புமானால், எமது மக்களின் உண்மையான, அதிகார பூர்வமான பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளுக்கு சட்டபூர்வமான அரசியல் அந்தஸ்து வழங்கப்படுவது அவசியமாகும். தடைசெய்யப்பட்ட, சட்ட விரோதமான ஒரு அமைப்பாக நாம் பேச்சுக்களில் பங்குபற்றினால் அப்பேச்சுக்களின் பயனாக பெறப்படும் அரசியற் தீர்வும் சட்டவிரோதமான ஒரு பொருளாகவே கருதப்படும். ஆகவே இப்படியான பேச்சுக்கள் ஒரு நிரந்தரத் தீர்வுக்கு ஆதாரமாக அமைந்துவிடப்போவதில்லை; எனவே தான் எமது விடுதலை இயக்கம் எமது மக்களின் ஏகபோகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் பேச்சுக்களில் சமத்துவமான ஒரு தகைமையுடன் பங்குகொள்வதே சாலச் சிறந்தது'

சமாதானப் பேச்சுக்கு முன்னராக சண்டை நிறுத்தப்படவேண்டும் என நாம் கோருவதும் ஒரு புதிய நிபந்தனையல்ல. பேச்சுவார்த்தைகளுக்கு முன்பாக ஒரு நல்லெண்ண சூழ்நிலையையும், சமாதானப் புறநிலையையும் உருவாக்கும் நோக்குடன் இரு தரப்பினரும் சகலவிதமான போர் நடவடிக்கைகளையும் நிறுத்தவேண்டுமென நாம் நீண்டகாலமாக தொடர்ச்சியாக வாதாடி வந்துள்ளோம். இந்த நோக்கத்துடனேயே எமது விடுதலை இயக்கம் கடந்தஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையுடன் ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்தம் செய்து மாதாந்த அடிப்படையில் அதனை நீடித்து வந்ததுடன், சிறீலங்கா அரசையும் போர் நிறுத்தம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துவருகிறோம். ஆகவே பேச்சுக்கு முன்வரப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்பதும் பயங்கரவாத அமைப்பாக எம்மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கவேண்டுமென நாம் கோருவதும் கடுமையான முன்நிபந்தனைகள் எருதுவதுதவறாகும். கொடும் போரில் ஈடுபட்டு நிற்கும் இரு தரப்பினரும் சமாதான வழிமுறையை தழுவுவதற்கு ஏற்ற முறையில் நல்லெண்ணப் புறநிலையை உருவாக்கிக் கொடுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கையாகவே இவற்றைக் கருதுவது அவசியமாகும் என்று திரு பாலசிங்கம் தெரிவித்தார்.

சிறீலங்கா அரசு மேற்கொண்டுள்ள தற்காலிக போர்நிறுத்தம் சம்பந்தமாக 'தமிழ்கார்டியன்' பத்திரிகையாளர் விடுத்த கேள்விக்கு திரு பாலசிங்கம் இதுவொரு நல்ல அறிகுறி. ஆயினும் இக் குறுகிய காலப் போர்நிறுத்தம் புதுவருட விடுமுறைக்காக அறிவிக்கப்பட்டிருக்கிறதேதவிர சமாதான சூழ்நிலை உருவாக்குவதற்கோ அன்றிப் புலிகளின் போர் நிறுத்தத்திற்குப் பதில் நடவடிக்கையாகவோ இது அறிவிக்கப்படவில்லை. விடுதலைப் புலிகள் கடைப்பிடிக்கும் போர்நிறுத்தம் அர்த்தமுள்ளது, ஆக்கபூர்வமானது அமைதியை இலட்சியமாகக் கொண்டது. சிறீலங்கா அரசும் தனது தற்காலிக போர் நிறுத்தத்தை காலவரையறை இன்றி நீடித்து புலிகளின் போர் நிறுத்தத்துடன் தொடர்பு படுத்தி அதற்கு மதிப்பளிக்க வேண்டும்; அப்பொழுதுதான் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கக்கூடிய அமைதியான புறநிலை ஏற்படும்; அல்லாத பட்சத்தில் சிங்கள அரசின் இந்த தற்காலிக போர்நிறுத்தம் அர்த்தமற்றதும் பயனற்றதுமான ஒரு செயலாகவே இருக்கும் என அவர் விளக்கிக்கூறினார்;

#### தடைக்கு எதிராக சட்ட நடவடிக்கை

விடுதலைப் புலிகளின் இயக்கம் மீது பிரித்தானிய அரசு விதித்துள்ள தடைக்கு எதிராக நாம் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

இது சம்பந்தமாக பிரபல ஆங்கில சட்டவல்லுனர்களுடன் நாம் கலந்தாலோசித்து வருகிறோம் முதல் நடவடிக்கையாக எமது இயக்கத்தின் மீதான தடையை நீக்கிவிடுமாறு பிரித்தானிய உளதுறை அமைச்சருக்கு விண்ணப்பிக்க முடிவு செய்திருக்கிறோம்இவ் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் மேல் முறையீட்டு ஆணையகத்திற்கு மனுச் செய்து வழக்கு தொடரவும் தீர்மானித்திருக்கிறோம்.

லண்டனிலுள்ள சில தனி நபர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக பிரித்தானிய தடைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிப்பதையும் அதற்காகப் பொது மக்களிடம் நிதி சேர்த்து வருவதையும் திரு.பாலசிங்கம் கடுமையாக கண்டித்தார்.

பிரித்தானிய அறிவித்துள்ள தடையை நீக்குவதற்குஎமது இயக்கம் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும்.

#### பிரித்தானியாவின் தடைநோர்வேயின் சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை

பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில், பிரித்தானிய அரசு விடுதலைப்புலிகள்இயக்கத்தை இணைத்துக் கொண்டது குறித்து உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் ஆத்திரமும் கவலையும் கொண்டுள்ளனர்;

#### சட்டத்தின் பிடிக்குள் சிக்காது செயற்பட்டு வருகிறோம்

பிரித்தானியாவின் தடையானது நோர்வே அரசுமுன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகளுக்கு குந்தகமாக அமைந்துள்ளது. பிரித்தானியாவின் இந்த முடிவு சிங்கள அரசாங்கத்தின் கடும் போக்கிற்கும் முண்டு கொடுத்து ஊக்கமளிப்பதாக இருக்கிறது இதனால் போர் நெருக்கடியைத் தணித்து சமாதான சூழலையும், இயல்பு நிலையையும் உருவாக்க சிங்கள அரசு மறுத்து வருகிறது. சமாதானப் பேச்சுக்களுக்கும் தீர்வுக்கும் வழிகோலும் வண்ணம் சிறிலங்கா அரசாங்கம் புலிகள் மீதுவிதித்த தடையை நீக்கவேண்டுமென நாம் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருகிறோம்.

பிரித்தானியா விதித்த தடை லண்டனில்விடுதலை புலிகளின் அரசியற்செயற்பாடுகள்மீது நெருக்குவாரங்களை இறுக்கியபோதும் நாம் மாற்றுவழிகளையும் புதிய தந்திரோபாயங்களையும் கடைப்பிடித்து சட்டத்தின் பிடிக்குள் சிக்குப்படாமல் செயற்பட்டு வருகின்றோம்.

இந்தசட்டத்தால் எனது தனிப்பட்ட அரசியற்சுதந்திரங்களும் உரிமைகளும் பாதிக்கப்பட்டிருக்கிறது எமது விடுதலை இயக்கத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதியாக செயற்படுவதற்கும் இடையூறுகள் இருக்கின்றன. இந்தச்சட்டத்தின் விதிகளின் படி நான்என்நேரமும் கைது செய்யப்பட்டு தண்டனைக்கு ஆளாக்கப்படலாம் என்றாலும் நான் லண்டனில் தான் வசித்து வருகிறேன் இங்கிருந்து எனது அரசியல் வேலைகளை தொடர்ந்து செய்து வருகிறேன் இயக்கத்தின் சார்பில் சமாதான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறேன் ஒட்டுமொத்தத்தில் பிரித்தானிய தடைச்சட்டமானது சமாதான முயற்சிகளுக்கும் குந்தகமாகவே அமைகிறது என புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விளக்கிக் கூறியுள்ளார். [வ]


**காணவில்லை**

எழுதுமட்டுவாள் வடக்கை நிரந்தர முகவரியாகவும் தற்பொழுது சுதுமலை வடக்கு மனிப்பாயில் வசித்து வருபவருமகிய சின்னன்இராசா (தங்கராசா) வயது58 என்பவரை கடந்த 16ந் திகதி முதல் காணவில்லை;

பொது நிறம், நரைத்த தலைமுடி நீலநிறசாரமும் வெள்ளைநிற சேட்டும் அணிந்திருந்தார். இவரைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கே. ஸ்ரீலிங்கம் (சாயி தொலைத் தொடர்பு நிலையம்தொலைபேசி இலக்கம் 3129) சாத்தாவத்தை லேன், மானிப்பாய் எனும் முகவரிக்கு தகவல் தரவும்.

நன்றி

இ. மகேந்திரம் (மகன்)


### காங்கேசனில் ஒப்படைப்பு

[யாழ்ப்பாணம்]

கிளாலிப் பகுதியில் காயமடைந்தநிலையில் கடந்த ஜனவரிமாதம் 24ம்திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட உடையார் கட்டு கனகராஜன் குளத்தைச் சேர்ந்த சரவணமுத்து சிவானந்தன் (வயது-23) என்பவரைபடையினர் நேற்று காங்கேசன் துறை தடுப்பு முகாமில் ஒப்படைத்தனரென்றுயாழ்பொலிசார் மனிதஉரிமை ஆணைக் குழு அதிகாரிக்கு அறிவித்துள்ளனர். (இ-10)


அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்

**நியூ ராதிகாஸ்**

**நகை மாளிகை**

189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(இ/ 1770)


## திகதி நீடிப்பு

1995 ம் ஆண்டு நடைபெற்ற ரிவிரச இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் கண்டு எடுக்கப்பட்ட பவுண் நகைகள், பிஸ்கட்டுக்கள், தகடுகளை உரிமைகோரும் திகதி அடுத்த மாதம் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது;

இவ்வாறு யாழ் அரச அதிபர் க.சண்முகநாதன் விடுத்த பத்திரிசைச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்;

அச்செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

பலாலிஇராணுவத்தினரால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்களின் உரிமையாளர்கள் இருந்தால் அவற்றின் அடையாளம், வேலைப்பாடுகள் மாதிரி அமைப்பு நிறை ஆகியவற்றை குறிப்பிட்டு எழுத்து மூலம் 31.05 2001 க்கு முன்பாக விண்ணப்பிக்குமாறும், விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட நகைகள், பிஸ்கட்டுக்கள் கையளிக்கும் போது பத்திரிகைகள் மூலம் பொது மக்களுக்கு அறியத்தரப்படுமென்றும் இது தொடர்பாக ஏற்கனவே எழுத்து மூலம் அறியத்தந்தவர்கள் அறிவிக்கத் தேவையில்லை என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். [வ.உ.15]

### நீர்கொழும்பு...

றோர் உறவினர்ஆர்ப்பாட்டமொன்றைநடத்தவுள்ளனர்.

நீர்கொழும்பு நீதிமன்றிற்குமுன்னால் நடைபெறவுள்ள இவ்ஆர்ப்பாட்டத்திற்கு பொலிசார் அனுமதி வழங்கியுள்ளனரென்று கைதிகளின் பெற்றோர், உறவினர்கள்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தம்மைபிணையில் விடுதலை செய்யுமாறு கோரி நீர்கொழும்புச்சிறையிலுள்ள சுமார்150ற்கும் மேற்பட்ட கைதிகள் தொடர்ந்து மூன்றாவது நாளாக இன்றும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களது போராட்டம் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிஅமைச்சர் பட்டிவீரக்கோனுக்கும் பொலிஸ் தலைமையகத்துக்கும் அறிவிக்கப்பட்டது.

இதுஇவ்வாறிருக்க நேற்று கைதிகளின் பெற்றோர் உறவினர்களால் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் சுமார் நூறுபேர்வரை கலந்து கொண்டமையும் இங்குகுறிப்பிடத்தக்கது. (இ


எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில்
செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில்-----

★ **நியூ நகுலா ஜுவல்லறி** ★

74, கஸ்தூரியார் வீதி, - - - - - யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[இ-1851]

**நகுலா நகைமாடம்**
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள் அவர் களது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது